# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 283 of 2024 |
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | இந்து |
| Father's Name | : | முத்துசாமி |
| Village | : | ஆம்பள்ளி |
| Taluk | : | பருகூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கூலி |
| Age | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 20th day of September 2024.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது ஆம்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கோவிலில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகாரை 15.03.2021 அன்று மகாராஜா கடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். பூசாரிப்பட்டி கூட்டு ரோட்டில் என் கணவர் மீது டூரிஸ்ட் பஸ் மோதி விபத்து ஏற்பட்டதாக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் இருந்து தொலைபேசியில் தகவல் சொன்னார்கள். 15.03.2021 அன்று காலை 09.00 மணிக்கு எனக்கு தகவல் சொன்னார்கள். தகவல் கிடைத்த பிறகு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு போய் பார்த்தேன். அங்கு என் கணவரை வேனில் கிடத்தி இருந்தார்கள். சம்பவ சமயத்தில் 8 வயதுடைய என் மகன் கீர்த்திவாசன் அங்கு ஆம்புலன்ஸ் இல் கிடத்தி இருந்தார்கள். நான் போய்

பார்க்கும் போது எனது கணவர் இறந்துவிட்டிருந்தார். பிரேத பரிசோதனை செய்வதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதனால் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

உங்களுக்கு இந்த விபத்து எப்படி நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நீங்கள் எந்த தேதியில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தீர்கள் என்றால் 15.03.2021 அன்று காலை 11.00 மணியளவில் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள விவரங்களை போலீசார் சொல்ல சொல்ல நீங்கள் எழுதினீர்களா என்றால் இல்லை நானாக தான் எழுதினேன். புகாரில் உள்ள வாகன எண் உங்களுக்கு எப்படி தெரியும் என்றால் என் அக்காளின் கணவர் சொன்னதின் பேரில் எழுதினேன். உங்கள் புகார் வாக்குமூலத்தில் அக்காளின் கணவர் சொன்னதின் பேரில் வாகன எண் எழுதியதாக குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் இல்லை. எத்தனை நாட்கள் கழித்து போலீசார் உங்களை விசாரித்தார்கள் என்றால் ஒரு வாரம் கழித்து விசாரித்தார்கள். அதற்கு முன்பு போலீசார் உங்களை விசாரிக்கவில்லை என்றால் நான் பெங்களூரு மருத்துவமனையில் இருந்ததால் விசாரிக்கவில்லை. உங்கள் கணவரின் அஜாக்கிரதையால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 283 of 2024 |
| Deposition of witness for | : | PW2 |
| Name | : | வீரமணி |
| Father's Name | : | முத்துசாமி |
| Village | : | ஆம்பள்ளி |
| Taluk | : | பருகூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கூலி |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 20th day of September 2024.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது ஆம்பள்ளி கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் மாடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறேன். இறந்து போன வேலு எனது தங்கையின் கணவர் ஆவார். 15.03.2021 அன்று எனக்கு 11.00 மணியளவில் காவல் நிலையத்தில் இருந்து எனக்கு தொலைபேசியில் வேலு என்பவர் உங்களுக்கு உறவினரா அவர் இறந்து விட்டார் நேரில் வந்து பாருங்கள் என்று தகவல் சொன்னார்கள். தகவல் கிடைத்து நான் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு வேலுவின் உடல் மீது பிரேத பரிசோதனை செய்வதற்காக வைத்திருந்தார்கள். நான் போய் பார்க்கும் போது சுமார் 12.00 மணி இருக்கும். வேலுவின் மகன் கீர்த்தி வாசனுக்கும் காயம் ஏற்பட்டிருந்ததால் அவரை சிகிச்சைக்காக அங்கிருந்தவர்கள் பெங்களுருக்கு எடுத்துச் சென்றார்கள். அதன்பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் தான் உடலை ஒப்படைப்பதாக சொன்னதால் காவல் நிலையத்திற்கு

நானும் எனது சகோதரியும் எனது தாயாரும் சென்று மகாராஜா கடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. போலீசார் வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்களா என்று ஞாபகமில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

உங்களது மச்சான் வேலுவிற்கு எப்படி விபத்து நடந்தது என்ற விவரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நீங்கள் அங்கு இல்லை என்று சொன்னால் சரிதான். இறந்து போன வேலு உங்கள் மச்சான் என்பதால் பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 283 of 2024 |
| Deposition of witness for | : | PW3 |
| Name | : | அண்ணாமலை |
| Father's Name | : | கன்னுப்பையன் |
| Village | : | ஆம்பள்ளி |
| Taluk | : | பருகூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | விவசாயம் |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 20th day of September 2024.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது ஆம்பள்ளியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 15.03.2021 அன்று காலை 09.30 மணிக்கு பொது மக்கள் யாரோ எனக்கு போன் செய்து வேலு தெரியுமா என்று கேட்டார்கள். நான் தெரியும் என்று சொன்னேன். பூசாரிப்பட்டி கூட்டு ரோடு அருகே வேலு இரு சக்கர வாகனத்தில் வரும் போது ஆந்திரா தனியார் பஸ் அவர் மீது ஏறி விட்டதாக சொன்னார்கள். பஸ் ஓட்டுநரால் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார்கள். தகவல் கிடைத்த உடன் நான் நேரடியாக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு மருத்துவரை பார்த்த போது, வேலு இறந்து விட்டதாகவும் பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் என்று சொன்னார். பின்னர் பிரேத பரிசோதனை முடித்து உடலை எங்களிடம் ஒப்படைத்தார்கள். நாங்கள் ஈம காரியம் செய்த பிறகு 10 நாட்கள் கழித்து போலீசார்

காவல் நிலையம் வர சொன்னதின் பேரில் நான் அங்கு போயிருந்தேன். அங்கு எதிரியும் இருந்தார். அவர் தான் பஸ் இன் ஓட்டுநர் என்று அங்கிருந்த பொது மக்கள் சொன்னார்கள். நானும் என் சித்தப்பா முருகேசன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் காவல் நிலையம் சென்றோம். மேற்படி வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

விபத்து எப்படி நடந்தது என்பது பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். காவல் நிலையத்திற்கு உங்களை அழைத்ததாகவும், அங்கு போன போது ஆஜர் எதிரி அங்கு இருந்ததாகவும், அவர் தான் விபத்தை ஏற்படுத்திய பஸ் ஓட்டுநர் என்று சொன்னதாகவும் அவரும் அதை ஒப்புக் கொண்டதாகவும் நீங்கள் சொல்வது தவறு என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை போலீசார் உங்களை விசாரிக்கும் போது சொன்னீர்களா என்றால் சொன்னேன். வேலு உங்களுக்கு உறவினரா என்றால் இல்லை ஒரே ஊர்க்காரர். இறந்து போனவர் உங்கள் ஊர்க்காரர் என்பதால் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.